தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 209/ந/2023
நாள் 13.09.2023

திருமதி. S. சந்தனமாரீஸ்வரி
விருதுநகர், விருதுநகர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
விருதுநகர் நகராட்சி,
விருதுநகர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், விருதுநகர், அய்யனார் நகர், எண்.8/297 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. S. சந்தனமாரீஸ்வரி என்பவரின் 14.07.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.07.2023 அன்று பெறப்பட்டு 209/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

விருதுநகர் மாவட்டம், விருதுநகர், அய்யனார் நகர், எண்.8/297 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. S. சந்தனமாரீஸ்வரி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"நான் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட கடை எண்.2005204 கொண்ட கடையை 31.12.2003 அன்று ஏலம் எடுத்து 01.01.2004 முதல் மாத வாடகை ரூ.755/– என்று நிர்ணயம் செய்யப்பட்டது. வாடகை டெபாசிட் தொகையாக ரூபாய் 1 இலட்சம் செலுத்தினேன். எனது கணவர் இரு சக்கர வாகன ஒர்க்ஷாப் நடத்த ஏலம் எடுத்து சரியான முறையில் நிலுவையில்லாமல் எனது பெயரில் நடத்தி வந்தார். அதன்பின்பு 2018 மார்ச் மாதம் திடீரென கடை வாடகை ரூ.5,000/–ஆக உயர்த்தப்பட்டது. பின்பு நகராட்சியிலிருந்து உயர்த்தப்பட்ட நாட்களுக்கு முன்பு அரியர் வாடகை ரூ.1,20,000/– கட்ட வேண்டும் என கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் அந்த பணத்தையும் கட்டினேன். பின்பு மதுரை உயர் நீதிமன்றத்தில் வாடகைக்கு ஆட்சேபனை தெரிவித்து வழக்கு தொடரப்பட்டது. (WP (MD) No. 22640, 22642, 22643/2017) மாத வாடகை ரூபாய்.3,200/– பணம் கட்டி பின்பு 2 வருடம் கழித்து மதுரை உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி 100% வாடகை கட்ட வேண்டும் என்று கூறி நோட்டீஸ் கொடுத்தவுடன் நான் வங்கி வரைவோலையாக ரூ.2,14,767/– தொகையை கடிதத்தில் உள்ளபடி 6 தவணையாக SBI வங்கி வரைவோலையாக செலுத்தியும் நகராட்சி கமிஷனர் பெயரில் அனுப்பிய பணத்தை வரவு வைக்காமல் பணம் மோசடி

செய்துவிட்டு வாடகை கட்டவில்லை என கூறி நான், எனது கணவர் சக்திவேல் இல்லாத சமயத்தில் எனது கடையை R.I ரவி 24.12.2021 ஆம் தேதி பூட்டி சீல்வைத்து சென்றுவிட்டார். அதன்பின்பு நான் மற்றும் எனது கணவர் சக்திவேல் 300–க்கு மேற்பட்ட முறை நகராட்சியில் முறையிட்டும் கடை சாவி கொடுக்காமலும், நாங்கள் கட்டிய வாடகை ரூபாயை வரவு வைத்த பில் போடாமல் ஏமாற்றி மோசடி செய்துள்ளார். கடையை தந்து விடக் கோரியும் வாடகைப் பணம் வரவு வைத்து பில் தரக்கோரியும் இதுநாள் வரை கடையை திறக்கவில்லை. அப்படி கடை வேண்டும் என்றால் ரூ.20,000/– இலஞ்சம் வேண்டும் என்றார். பில் தராமல் எனது கணவரை அலைக்கழிப்பு செய்து வருகிறார்கள். நாங்கள் ஆதிதிராவிட பறையர் சமுதாயத்தைச் சேர்ந்த பட்டியல் இனத்தைச் சேர்ந்தவர் என்பதால் உங்களுக்கு எல்லாம் கடை கிடையாது நகராட்சியை விட்டு வெளியேபோடா என்று ஜாதிய தீண்டாமையுடன் கேவலமாக ஆவேசமான வார்த்தைகளில் எனது கணவரை திட்டியுள்ளார். அதுமட்டுமல்லாது எனக்கு என்றால் அந்த கடை ரூ.7,800/– வாடகை கட்ட வேண்டும், வாடகையை வசூலித்துவிட்டு அதே கடையை அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுத்தும் வகையிலும், சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்படுத்தும் வகையிலும் ஆதிக்க சாதியைச் சேர்ந்தவருக்கு எங்களிடம் எந்த ஒரு முறையான அனுமதியும் பெறாமல் பொது ஏல அறிவிப்பும் கொடுக்காமல் ரகசியமாக கடை எண்.2005204–ஐ மற்றவர்களுக்கு ரூ.3,300/–க்கு வாடகைக்கு கொடுத்துள்ளார். இந்த கடையை மீட்பதற்கும், நான் கட்டிய வாடகை தொகை ரூ.2,14,367–ஐ வரவு வைத்து பில் கொடுக்கவும் பலமுறை மாவட்ட ஆட்சியாளர், முதலமைச்சர் தனிப்பிரிவு, திருநெல்வேலி RDMA –க்கு பத்துக்கும் மேற்பட்ட மனுக்கள் அனுப்பியும் இந்நாள் வரை இவர் தனது பண செல்வாக்கால் ஆதிக்கசாதி அதிகார செல்வாக்கிலும் எந்த ஒரு பதிலும் கூறாமல் வந்துள்ளார். ஆகையால் விருதுநகர் நகராட்சி ஆய்வாளர் ரவி மீது நடவடிக்கை எடுத்து எனது கடைக்கு கட்டிய பணத்தை வரவு வைத்து ரசீது பெற்றுத்தர வேண்டும். எனது கணவர் மீது சாதி ரீதியாக தகாத வார்த்தைகள் கூறியதால் அவர் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து இவர் 40 கடைக்கு மேல் ரூ.3 கோடிக்கு மேலாக வாடகைக்கு இருக்கும் ஒப்பந்ததாரர்களை மிரட்டி பில் தராமல் மோசடி செய்து அலைகழிப்பு செய்து மனஉளைச்சல் செய்து வரும் விருதுநகர் நகராட்சி ஆய்வாளர் ரவியை விசாரனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் தங்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 31.07.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் விருதுநகர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

விருதுநகர் நகராட்சி ஆணையாளர் தனது 25.08.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

விருதுநகர் நகராட்சிக்கு சொந்தமான பூமாலை வணிக வளாக கடை எண்.4 திருமதி.சந்தனமாரிஸ்வரி என்ற பெயரில் எடுக்கப்பட்டு, மேற்படியார் கடையை நடத்தி வந்துள்ளார். மேற்படி கடைக்கு 2016 ஜனவரி முதல் 2021 ஜுன் மாத முடிய ரூ.3,69,930/– நிலுவையாக இருந்து வந்தது. மேற்படி தொகையை திருமதி.சந்தனமாரீஸ்வரி க/பெ.சக்திவேல் என்பவர் பெயரில் பாரத மாநில வங்கி கேட்பு வரைவோலை எண்.655164 நாள்.26.03.2018 தொகை ரூ.57,500/– மற்றும் பாரத மாநில வங்கி கேட்பு வரைவோலை எண்.257353 தொகை ரூ.20,220/– இரண்டு வரவோலை தொகை ரூ.77,720/– ஐ இந்நகராட்சி கருவூலத்தில் இரசீது எண்.63364, 63365, 63366, 63367 மற்றும் 34818 ஆகியவற்றின்படி வரவு வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாக்கி தொகை (ரூ.3,69,930 – ரூ.77,720/– = ரூ.2,92,210/– ) ரூபாய் இரண்டு இலட்சத்தி தொன்னூற்றி இரண்டாயிரத்து இருநூற்றி பத்து மட்டும் நிலுவையாக இருந்து

வந்ததால் திருமதி.சந்தனமாரீஸ்வரி என்பவரிடம் பலமுறை செலுத்தக்கோரியும் பாக்கி தொகை தனியரால் செலுத்தப்படவில்லை. அச்சமயத்தில் விருதுநகர் நகராட்சிக்கு கடை வாடகை செலுத்தப்படாத கடைகளுக்கு நகராட்சி மூலம் பூட்டி சீல் வைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்போது மேற்படி பூமாலை வணிக வளாக கடைகள் பூட்டி சீல் வைக்கப்பட்டது.

அதன் பின் திருமதி.சந்தனமாரீஸ்வரி என்பவரிடம் கடை நிலுவை தொகை ரூ.2,92,210/—ஐ பலமுறை நேரில் செலுத்தக்கோரப்பட்டது. பல வாய்ப்புகள் கொடுத்தும் மேற்படியார் பாக்கி தொகையை செலுத்தாத காரணத்தால் குத்தகை விதிகளின்படி பொது ஏலத்தில் மேற்படி கடையும் சேர்த்து பொது ஏலம் / ஒப்பந்த புள்ளி விளம்பர அறிக்கை அனுப்பப்பட்டது.

12.10.2022—ல் திரு.M.நாகேந்திரன் மற்றும் திரு. எஸ்.சபரி என்பவர்கள் பொது ஏலத்தில் கலந்து கொண்டனர். மேற்படி பொது ஏலத்தில் கலந்து கொண்ட இருவரின் ஏலக் கேள்வி விவரம் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டது. அதன்படி திரு.M.நாகேந்திரன் என்பவருக்கு நகர்மன்ற தீர்மான எண்.267 நாள் 30.11.2022—ன்படி மேற்படி கடை ஒதுக்கீடு செய்யப்பட்டது. நகர்மன்ற தீர்மானத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.M.நாகேந்திரன் என்பவருக்கு கடை நடத்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கடைக்கு நிலுவையில் உள்ள ரூ.2,92,210/—ஐ திருமதி.சந்தனமாரீஸ்வரி என்பவர் பொது ஏலம் வைக்கப்பட்ட தேதி வரை செலுத்தவில்லை. திருமதி.சந்தனமாரீஸ்வரி பெயரில் மேற்படி கடைக்கு செலுத்தக்கோரி எவ்வித வரைவோலையோ, காசோலையோ வரப்படவில்லை என்ற விபரத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) மனுதாரரும் மற்றும் விருதுநகர் நகராட்சி ஆணையரும் 28.08.2023 அன்று தென்காசி முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 18.08.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திருமதி.S.சந்தனமாரீஸ்வரி 28.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"விருதுநகர் நகராட்சிக்கு சொந்தமான கடை எண் 2005204 கொண்ட கடைக்கு வாடகைத் தொகை நிலுவையாக ரூ 2,14,367/— ஐ நகராட்சிக்கு செலுத்திய நிலையில் மேற்கண்ட தொகைக்கான ரசீதை எனக்கு தரவில்லை. மேலும், மேற்கண்ட கடைகளை, எனக்கு பதிலாக வேறு ஒருவருக்கு கொடுத்துள்ளனர். மேற்கண்ட கடையில் இருசக்கர வாகன ரிப்பேர் செய்து வந்த நிலையில், இப்போது மேற்கண்ட கடையை நடத்த இயலவில்லை. எனவே, மேற்கண்ட கடையை எனக்கு திரும்ப அளித்திடவும், நான் செலுத்திய தொகையான ரூ 2,14,367.00 க்கான ரசீதினை எனக்கு நகராட்சி அளித்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான விருதுநகர் நகராட்சி ஆணையராக பணிபுரியும் திருமதி.தோ.லீனாசைமன் என்பவர் 28.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"விருதுநகர் நகராட்சிக்கு சொந்தமான பூமாலை வணிக வளாகக் கடை எண்.4ஐ திருமதி. சந்தனமாரீஸ்வரி என்ற பெயரில் எடுக்கப்பட்டு மேற்படியார் கடையை நடத்தி வந்துள்ளார். மேற்படி கடைக்கு 2016 ஜனவரி முதல் 2021 ஜூன் மாதம் முடிய ரூ.3,69,930/—

வாடகைத் தொகை நிலுவையாக இருந்து வந்தது. மேற்படி தொகையை திருமதி. சந்தனமாரீஸ்வரி க/பெ. சக்திவேல் என்பவர் பெயரில் பாரத மாநில வங்கி கேட்பு வரைவோலை எண்.655164, நாள்: 26.03.2018 தொகை ரூ.57,500/– மற்றும் பாரத மாநில வங்கி கேட்பு வரைவோலை எண்.257353 தொகை ரூ.20,200/– இரண்டு வரைவோலை தொகை ரூ.77,720/– இந்நகராட்சி கருவூலத்தில் இரசீது எண்.63364, 63365, 63366, 63367 மற்றும் 34818 ஆகியவற்றின்படி வரவு வைக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எனது 25.8.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், விருதுநகர் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

விருதுநகரைச் சார்ந்த மனுதாரர் திருமதி. S. சந்தனமாரீஸ்வரி என்பவர் தனது 14.07.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் விருதுநகர் நகரரட்சிக்கு சொந்தமான கடை எண். 2005204 கொண்ட கடைக்கு வாடகை நிலுவைத் தொகையான ரூ.2,14,367 செலுத்தியதற்கு விருதுநகர் நகராட்சியால் உரிய இரசீது வழங்கப்படாமலும் மற்றும் கடை பிறநபருக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளதாகவும் புகார் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் நகராட்சிக்கு சொந்தமான பூமாலை வணிகவளாகக் கடை எண்.4ஐ மனுதாரர் திருமதி. S. சந்தனமாரீஸ்வரி என்பவர் வாடகைக்கு எடுத்து நடத்தி வந்த நிலையில், 2016–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் 2021–ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரையில் திருமதி. S. சந்தனமாரீஸ்வரி வாடகைத் தொகையினை செலுத்தாமல், மொத்தம் ரூ.2,92,210/– வாடகை நிலுவையில் உள்ளதாக தெரிவித்து அதனை செலுத்துமாறு 27.12.2021 நாளிட்ட கேட்பு அறிவிப்பு நகராட்சியால் மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஆனால் மனுதாரர் தனது பெயர் தனது கணவர் பெயர் மற்றும் பிறநபரின் பெயர்களில் மனுதாரர் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய மொத்த நிலுவை வாடகைத் தொகையான ரூ.2,14,367/–ஐ கீழ்க்காணும் 6 வங்கி வரைவோலைகள் மூலம் செலுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

| வ.எண். | செலுத்தப்பட்ட தேதி | வரைவோலை எண். | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| i | 21.03.2018 | 655164 | 57,500/– |
| ii | 21.03.2018 | 655163 | 57,500/– |
| iii | 19.03.2019 | 660787 | 35,400/– |
| iv | 04.02.2020 | 257353 | 20,220/– |
| v | 10.02.2020 | 257385 | 23,747/– |
| vi | 16.09.2021 | 261485 | 20,000/– |
| | மொத்தம் | | **2,14,367/–** |

விருதுநகர் நகராட்சி ஆணையாளரின் அறிக்கையின் மூலம் மொத்த வாடகை நிலுவைத் தொகை ரூ.2,92,210/– என குறிப்பிட்டுள்ள நிலையில், மனுதாரர் மொத்த வாடகை

தொகை ரூ.2,14,367/– என்றும் அத்தொகை பல்வேறு வங்கி வரைவோலைகள் மூலம் மேற்கண்டவாறு செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, விருதுநகர் நகராட்சியின் மேலாளர் மூலம் மனுதாரரால் தெரிவிக்கப்படும் வாடகை நிலுவைத் தொகை ரூ.2,14,367/–ஐ செலுத்தியது தொடர்பான உரிய ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்து, மனுதாரர் மற்றும் அவர் சார்பாக செலுத்திய வாடகை நிலுவைத் தொகைக்கு உரிய இரசீதை 1 மாத காலத்திற்குள் மனுதாருக்கு அளித்து அதன் அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு விருதுநகர் நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி. S.சந்தனமாரீஸ்வரி,
8/297, அய்யனார் நகர், விருதுநகர்.

2) ஆணையாளர், விருதுநகர் நகராட்சி,
விருதுநகர் மாவட்டம், விருதுநகர் – 626 001.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்
15/09/23